**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**இரண்டாம் வருட / இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு -**

**(2015 / 2016) - 2019 நவம்பர் / டிசம்பர்**

**TLS 2223 யாப்பும் அணியும்**

**Yappu & Alankara**

நேரம் : 03 **மணித்தியாலங்கள்**

**முதலாம் பகுதியில் முதலாம்** வினாவையும் அப்பகுதியின் ஏனையவற்றில் **ஒரு வினாவையும், இரண்டாம் பகுதியில் எவையேனும் மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

(01) **(அ)** பின்வரும் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள அசைகளையும் சீர்களையும் இனங்கண்டு வகுத்துக் காட்டுவதோடு, அவற்றிற்குரிய பெயர்களையும் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(i) யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போலவாங்கே
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.

(ii) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

**(ஆ)** பின்வரும் செய்யுள்களில் உள்ள அணிகளை இனங்கண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(i) பால்போலும் இன்சொல் பவளம்போல் செந்துவர்வாய்
சேல்போல் பிறழும் திருநெடுங்கண் - மேலாம்
புயல்போல் கொடைக்கைப் புனல்நாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வது அவர்.

(ii) நாற்குணமும் நாற்படையா ஐங்குணமும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மையரசு.

(02) (அ) பா, பாவினம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) தமிழிலக்கிய வடிவங்களில் ஒன்றான ‘பதிகம்’ என்ற வடிவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(03) (அ) தளை என்றால் என்ன என்பதனைக் குறிப்பிட்டு அதன் வகைப்பாட்டினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) எதுகை - மோனைத் தொடை பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி II

(04) ஆசிரியப்பாவின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் இயல்புகளை விபரிக்குக. (20 புள்ளிகள்)

(05) வெண்பாவை அதன் பொதுவான இயல்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

(06) காவியங்களின் அமைப்புப் பற்றித் தண்டியலங்காரம் கூறுவதை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

(07) உவமை அணி என்றால் என்ன என்பதை எடுத்துக்கூறி, அதன் வகைகளையும் பண்புகளையும் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

**************************